1975 மார்ச் 29]

Tamil Nadu Social Security Scheme

*201 Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru K. S. Ganapathi): Will the Hon. the Chief Minister be pleased to state whether Government Servants and teachers who are contributors to the Tamil Nadu Government Servants' Family Benefit Fund Scheme are eligible to contribute to the Tamil Nadu Social Security Scheme also?

தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப நலத் திட்டத்திற்குத் தொகை செலுத்துகின்ற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கும் தொகை செலுத்தத் தகுதி உடையவர்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

Vacation Salary to Teachers transferred from one School to another

*202 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government have given permission to the Diocese of Madurai and Ramanathapuram to incorporate the transfer clause in the agreement with the teachers under its management; and

(b) if so, whether the Government will pass orders to pay the vacation salary to the teachers transferred from one school to another without insisting on the condition to serve for eight months in a particular school to be eligible to draw the vacation salary?

ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றப்படும் ஆசிரியர்களுக்கு விடுமுறைச் சம்பளம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டத் திருச்சபையின் (Diocese) நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆசிரியர்களுடன் அந்நிர்வாகம் செய்துகொண்டுள்ள

ஒப்பந்தத்தில் மாற்றல் குறித்த பகுதியைச் (Transfer Clause) சேர்த்துக்கொள்ள அந்நிர்வாகத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றப்படும் ஆசிரியர் வகையில் விடுமுறைச் சம்பளம் பெறத் தகுதியுடையவராவதற்கு, குறிப்பிட்டதொரு பள்ளியில் எட்டு மாதங்களுக்குப் பணியாற்றியிருக்க வேண்டும் என்னும் நிபந்தனையை வற்புறுத்தாமலேயே, விடுப்புச் சம்பளம் வழங்க அரசு ஆணைகள் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மதுரை-இராமநாதபுரம் கிருஸ்தவ திருச்சபைக்கு (Diocese) அவர்களால் நடத்தப்படும் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்ற பள்ளிக் கல்வி இயக்குநர் அனுமதி வழங்கியுள்ளார்.

(இ) 1—12—1974 முதல் தமிழ்நாடு அங்கிகாரம் அளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டம் 1973-ன் கீழ் வெளியிடப்பட்ட விதிகள் அமுலுக்கு வந்துள்ளன. அந்த விதிகளில் தரப்பட்டுள்ள (ஆசிரியர்களோடு நிர்வாகங்கள் செய்து கொள்ள வேண்டிய) ஒப்பந்தப் படிவத்தில், ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு ஆசிரியர்களை மாற்ற வகை செய்யப்படவில்லை. எனவே, 1—12—1974-க்குப் பின் அத்தகைய மாற்றங்களைச் செய்ய அவ்விதிகளின்படி இடமில்லை, மதுரை-இராமநாதபுரம் கிருஸ்தவ திருச்சபையின் கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு பள்ளியாண்டு நடுவில் 1—12—1974க்கு முன் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அவர்களை இரு பள்ளிகளிலும் பணியாற்றிய மொத்த காலத்தையும் கோடை விடுமுறைச் சம்பளம் கொடுப்பதற்கு கணக்கில் கொள்வது குறித்து கோரிக்கைகள் வந்தால் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆய்வு செய்து முடிவு செய்வார்.

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவரவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேலும் பணியாற்றிய நிரந்தர ஆசிரியர்கள் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குப் போகும்போது கோடை விடுமுறை ஊதியத்தை இழந்திருக்கின்றார்கள். இது 1972-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றிருக்கின்றது. எனவே அந்த மாதிரி ஆசிரியர்களுக்கு ஊதிய இழப்பு இல்லாமல் இருக்க அரசு ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே தெரிவித்தபடி, அவைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கல்வித்துறையில் யார் யாருக்குக் கொடுப்பது என்பதுபற்றி முடிவு செய்யலாம். 1—12—1974-க்கு முன் மாற்றம் செய்யப்பட்டால்

அவர்களுக்கு இரண்டு பள்ளிகளில் பணியாற்றிய காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலே யார் யார் என்று வருமானால் அதைப்பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம்.

Oriental High School, Mutharasanallur

* 203 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the staff grant due to the Oriental High School, Mutharasanallur in the Tiruchirappalli Educational District for the months of April 1970, November and December 1972 and January to May 1973, has not been released and that the teachers of that school were not paid the salary due to them for these months;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the steps taken to pay the teachers their legitimate dues?

முத்தரசநல்லூர் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி

திரு. பி. ஆர். தாமஸ் (திரு கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்திலுள்ள முத்தரசநல்லூர் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளிக்கு, 1970 எப்ரல் திங்கள், 1972-ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள், 1973 ஜனவரி திங்களிலிருந்து மே திங்கள் ஆகிய மாதங்களுக்கு ஆசிரியர் பணியாளர் மானியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ? அப்பள்ளி ஆசிரியர்களுக்கு அம்மாதங்களுக்குச் சேர வேண்டிய சம்பளம் கொடுக்கப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

(உ) ஆசிரியர்களுக்குச் சேர வேண்டிய உரிய சம்பளத்தைக் கொடுக்க எடுத்துள்ள நடவடிக்கை யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருச்சிராப்பள்ளி, முத்தரசநல்லூரில் உள்ள கீழ்த்திசைமொழி உயர்நிலைப்பள்ளிக்கு வழங்க வேண்டிய ஆசிரியர் சம்பள மானியம் 1971 எப்ரல் 1972 நவம்பர், 1973 மே ஆகிய மூன்று திங்களுக்கு வழங்கப்படவில்லை.